மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண்.128, திரு.ஏ. ரவிக்குமார், மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர்.

128—

மாங்கோடு குப்பத்தில் புயல் பாதுகாப்பு இல்லம் அமைத்தல்.

***16576*—திரு.ஏ. ரவிக்குமார்:**

மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பொன்னேரி தொகுதி, மாங்கோடு குப்பம் பகுதியில் புயல் பாதுகாப்பு இல்லம் அமைக்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது அமைக்கப்படும்?

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. ஏ. ரவிக்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த வெள்ளத்தின்போது என்னுடைய தொகுதியில் தேசிய நெடுஞ்சாலையில் காரனோடை மேம்பாலம் உடைந்தபோது உடனடியாகப் போர்க்கால நடவடிக்கை எடுத்து சுமார் ரூபாய் 1.40 கோடி செலவில் பெய்லி பிரிட்ஜ் குறிப்பிட்ட காலத்திற்கு முன்பாக அமைத்து, போக்குவரத்தைச் சீர்செய்த நம்முடைய இதய தெய்வம் மாண்புமிகு டாக்டர் புரட்சித்தலைவி அவர்களுக்கும் மாண்புமிகு அண்ணன் பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்களுக்கும் எனது நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன். எனது பொன்னேரி தொகுதியில் கடற்கரையை ஒட்டிய கிராமங்களான சின்ன மாங்கோடு, பெரிய மாங்கோடு, புதுக்குப்பம், கல்லூர், கீரப்பாக்கம், கருக்குக்குப்பம் என்று பல்வேறு குப்பங்களில் இந்த மாங்கோடு பகுதியில் சுமார் 4,000 பேர்கள் வசிக்கின்றனர். நம்முடைய ஒப்பற்ற தலைவி டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள்தான் முதன்முதலாக இப்பகுதியில் குடிசைகளை அகற்றி, சுமார் 300 இலவச மீனவர் இல்லங்களைக் கட்டித் தந்து அவர்களுடைய வாழ்க்கைத் தரத்தை உயர்த்தினார்கள். இங்கே மழை நேரங்களில், புயல், வெள்ளக் காலங்களில் மழைநீர், கடல் நீர் ஊருக்குள் வந்து, வீட்டுக்குள் சென்று விடுகிறது. இதனால் அவர்களைப் பள்ளிகளில் தங்க வைப்பது மிகுந்த சிரமமாக உள்ளது. எனவே, மீனவர்களின் பாதுகாவலனாக இருக்கிற நம்முடைய அரசு அப்பகுதியில் புயல் பாதுகாப்பு இல்லத்தை எப்படியாவது அமைத்துத் தருவதற்கு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புயல் பாதுகாப்பு இல்லம் கட்டுவதற்குப் பல்வேறு நிபந்தனைகள் இருக்கின்றன. சுமார் 5,000 மக்கள் அந்தப் பகுதியில் பயன்பெறுகின்ற வகையில் இருக்க வேண்டும். அதைத்தவிர, அந்த இடம் கடல் மற்றும் உயர் அலைகள் மட்டத்தை விட உயர்ந்த இடமாக அமைய வேண்டும். சுற்றி 3 கி.மீ. அளவிலே நெருக்கமான கிராமங்கள் இருக்க வேண்டும். அந்த இடம் அரசு புறம்போக்கு நிலமாக இருக்க வேண்டும். அதுபோல இருக்கின்ற இடம் 1 எக்டேருக்குக் குறையாமல் இருக்க வேண்டும் என்ற சூழ்நிலையில்தான் அந்தப் பகுதியிலே புயல்பாதுகாப்பு இல்லங்கள் அமைக்கப்படுகின்றன. ஏற்கனவே 124 புயல் பாதுகாப்பு இல்லங்கள் இருக்கின்றன. இந்தப் பகுதியிலே இப்படிப்பட்ட புயல் பாதுகாப்பு இல்லங்களை அமைப்பதற்கான செயற்குறிப்பு அரசினுடைய கவனத்திலே இல்லை. இருந்தாலும் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையினை ஏற்று, மேற்படி நிபந்தனைகளுக்கு உட்பட்டு இடம் ஏதாவது இருக்கிறதா என்பதை ஆய்வு செய்து, அரசு அதைப் பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ஏ. ரவிக்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏழை மக்கள் கண்ணீர் வடித்தால் மழை என்றும், வெய்யில் என்றும் பாராமல் ஓடோடி வந்து உதவிக்கரம் நீட்டுகின்ற இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்களின் பொற்கால ஆட்சியில் மூன்று துறைகளிலும் தன்னுடைய முத்தான திறமைகளை வெளிப்படுத்திக் கொண்டிருக்கும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பரிசீலனை செய்வதாக எடுத்துக் கூறியதற்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். அடுத்த நிதியாண்டில், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறிய அனைத்து அடிப்படை வசதிகளையும் நாங்கள் அரசிற்குத் தருவதற்குத் தயாராக இருக்கிறோம். அடுத்த நிதியாண்டில் நிச்சயமாக இந்தத் திட்டத்தை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நிறைவேற்றித் தருவாரா என்பதை அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-40

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் புயல் பாதுகாப்பு இல்லங்களைப் பொறுத்தமட்டில் பல்வேறு நிதி நிறுவனங்கள் உதவியுடன் நாம் கட்டிக் கொண்டிருக்கிறோம். ஏற்கனவே சொன்ன நிபந்தனைகளின் அடிப்படையில் அந்தப் பக்கத்திலே இடங்கள் இருக்கின்றன என்று சொல்லியிருக்கிறார்கள். அது சம்பந்தமாக அதிகாரிகளிடத்திலே சொல்லி ஆய்வு செய்து, நிதியாதாரங்களுக்கேற்ப இதுசம்பந்தமாக பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 129, திரு.ஏ.தா. பொன்னுவேல், மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர்.

129—

வரகூர் தொகுதியில் சின்னாற்றில் இரு பாலங்கள் அமைத்தல்.

***21626*—திரு. ஏ. தா. பொன்னுவேல்:**

மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வரகூர் தொகுதி, வேப்பூர் ஒன்றியத்தில் பெருமாத்தூருக்கும், பென்னகுணத்திற்கும் இடையில் சின்னாற்றில் இரு பாலங்கள் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது துவங்கப்படும்?

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே.

(அ) மற்றும் (ஆ): எட்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் இப்பணியினை மேற்கொள்ள இயலாது.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

திரு. ஏ. தா. பொன்னுவேல்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சொன்னதைச் செய்து, சொல்லாததையும் செய்யும் இந்த அரசு 5 1/2 கோடி மக்களுடைய நம்பிக்கை நட்சத்திரமாக விளங்கும் இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் பொறுப்பேற்றதற்குப் பிறகுதான், சாலைகளும், போக்குவரத்து வசதியும் சீர்பெற்று இன்றைக்கு மேன்மையான நிலையிலே இருக்கிறது என்றால் அது மிகையாகாது. இந்தப் பொற்கால ஆட்சியில், ஆட்சியை அலங்கரித்துக் கொண்டிருக்கின்ற அமைச்சர் பெருமக்கள் அனைவரும் துரிதமாக சிறப்பான முறையிலே செய்து வருகின்றார்கள் என்றால் அது மிகையாகாது. குறிப்பாக பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் துணிவாக, துரிதமாக புதுப்புது சாதனைகளைப் படைத்து வருகின்றார்கள். அப்படிப்பட்ட இந்த நேரத்திலே, புரட்சித் தலைவி அவர்களுடைய பொற்கால ஆட்சியிலே, மக்களுடைய நீண்ட நாள் கோரிக்கைகளை நிறைவேற்றுகின்ற நம்முடைய புரட்சித் தலைவி ஆட்சியில் அந்தப் பகுதி மக்கள் வாழ்கின்ற பகுதியில் இருக்கின்ற, நகரமாய் இருக்கின்ற லப்பக்குடிகாட்டிற்கு செல்லுகின்ற நேரத்தில் மிகவும் சிரமப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே, அதைப் பரிசீலனை செய்து அந்த நீண்ட நாள் கோரிக்கையை நிறைவேற்ற அவர்கள் முன்வருவாரா என்று அறிய விரும்புகிறேன்.